©
தமிழ்நாடு அரசு
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 3.20 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 37] சென்னை, புதன்கிழமை, செப்டம்பர் 19, 2012
புரட்டாசி 3, திருவள்ளுவர் ஆண்டு–2043

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**2012–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 30–ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட பின்வரும் அவசரச் சட்டமானது இதன் மூலம் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகிறது:–**

**தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/2012.**

**1996–ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதோர் அவசரச் சட்டம்.**

இம்மாநிலச் சட்டமன்றப் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறாததாலும், இதன்பின்பு காணுகின்ற நோக்கங்களுக்காகத் தாம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டியதைத் தேவையானதாக்குகின்ற சூழ்நிலைகள் இருந்து வருகின்றன என்று தமிழ்நாடு ஆளுநர் தெளிவுறக் காண்பதாலும்:–

எனவே, அரசமைப்புச் சட்டத்தின் 213–ஆம் உறுப்பின் (1)–ஆம் கூறின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, ஆளுநர் பின்வரும் அவசரச்சட்டத்தை இப்போது இதன் மூலம் பிறப்பிக்கின்றார்:–

**1. (1)** இந்த அவசரச் சட்டம், 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்த) அவசரச்சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**(2)** இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 43/1997. **2. 1996–**ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 12–ஆம் பிரிவில், (3)–ஆம் உட்பிரிவிற்கான மூன்றாம் வரம்புரையில், ''அறுபத்தைந்து ஆண்டுகள்'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ''எழுபது ஆண்டுகள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 12–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2012 ஆம் ஆண்டு
ஜூலைத் திங்கள் 30 ஆம் நாள்.

**கோ. ரோசையா,**
*தமிழ்நாடு ஆளுநர்.*

**விளக்கவுரை**

தற்போது தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவியை வகிப்பதற்கான பெரும் அளவு வயது வரம்பானது அறுபத்தைந்து ஆகும். இம்மாநிலத்தில் கல்வியாளர்கள் பெறும் அறிவும் அனுபவமும் சட்டக்கல்வியை வளம்பெறச் செய்வதற்காகப் பயன்படுத்துவதற்கு இயல்விக்கும் வகையில் துணைவேந்தரின் ஓய்வு பெறும் வயதினை உயர்த்துவதற்குக் கருதப்பட்டுள்ளது. அதற்கிணங்கிய வகையில் அரசானது துணைவேந்தரின் ஓய்வு பெறும் வயதினை, 2009 ஆம் ஆண்டு மையப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்படி (மையச் சட்டம் 25/2009) உள்ளவாறான துணைவேந்தரின் ஓய்வு பெறும் வயதிற்கு இணையாக அமையும் வகையில் அறுபத்தைந்து வயதிலிருந்து எழுபது வயதாக உயர்த்துவதற்காக, மேற்சொன்ன 1996–ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 43/1997) திருத்துவதென முடிவு செய்துள்ளது.

2. இந்த அவசரச்சட்டம் மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**2012–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 30–ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட பின்வரும் அவசரச் சட்டமானது இதன் மூலம் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகிறது:–**

## தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 8/2012.

## 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசியச் சட்டப் பள்ளி சட்டத்தை திருத்துவதற்கானதோர் அவசரச் சட்டம்.

இம்மாநிலச் சட்டமன்றப் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறாததாலும், இதன் பின்பு காணுகின்ற நோக்கங்களுக்காகத் தாம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டியதைத் தேவையானதாக்குகின்ற சூழ்நிலைகள் இருந்து வருகின்றன என்று தமிழ்நாடு ஆளுநர் தெளிவுறக் காண்பதாலும்:–

எனவே, அரசமைப்புச் சட்டத்தின் 213 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, ஆளுநர் பின்வரும் அவசரச் சட்டத்தை இப்போது இதன் மூலம் பிறப்பிக்கின்றார்:–

1. (1) இந்த அவசரச் சட்டம், 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசியச் சட்டப் பள்ளி (திருத்த) அவசரச் சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 9/2012. 2. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசியச் சட்டப் பள்ளி சட்டத்தின் 11 ஆம் பிரிவில், (3) ஆம் உட்பிரிவிற்கான மூன்றாம் வரம்புரையில், ''அறுபத்தைந்து ஆண்டுகள்'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ''எழுபது ஆண்டுகள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 11 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2012 ஆம் ஆண்டு
ஜூலைத் திங்கள் 30 ஆம் நாள்.

**கோ. ரோசையா,**
*தமிழ்நாடு ஆளுநர்.*

**விளக்கவுரை**

தற்போது தமிழ்நாடு தேசியச் சட்டப்பள்ளியின் துணைவேந்தர் பதவியை வகிப்பதற்கான பெரும் அளவு வயது வரம்பானது அறுபத்தைந்து ஆகும். இம்மாநிலத்தில் கல்வியாளர்கள் பெறும் அறிவும் அனுபவமும் சட்டக்கல்வியை வளம்பெறச் செய்வதற்காகப் பயன்படுத்தப்படுவதற்கு இயல்விக்கும் வகையில் துணைவேந்தரின் ஓய்வு பெறும் வயதினை உயர்த்துவதற்குக் கருதப்பட்டுள்ளது. அதற்கிணங்கிய வகையில் அரசானது துணைவேந்தரின் ஓய்வு பெறும் வயதினை, 2009 ஆம் ஆண்டு மையப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்படி (மையச் சட்டம் 25/2009) உள்ளவாறான துணைவேந்தரின் ஓய்வு பெறும் வயதிற்கு இணையாக அமையும் வகையில் அறுபத்தைந்து •வயதிலிருந்து எழுபது வயதாக உயர்த்துவதற்காக, 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசியச் சட்டப்பள்ளி சட்டத்தைத் (தமிழ்நாடு சட்டம் 9/2012) திருத்துவதென முடிவு செய்துள்ளது.

2. இந்த அவசரச் சட்டம் மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**2012–ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 30–ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட பின்வரும் அவசரச் சட்டமானது இதன் மூலம் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகிறது:–**

**தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 9/2012.**

**1989–ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கின அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதோர் அவசரச் சட்டம்.**

இம்மாநிலச் சட்டமன்றப் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறாததாலும், இதன் பின்பு காணுகின்ற நோக்கங்களுக்காகத் தாம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டியதைத் தேவையானதாக்குகின்ற சூழ்நிலைகள் இருந்து வருகின்றன என்று தமிழ்நாடு ஆளுநர் தெளிவுறக் காண்பதாலும்:–

எனவே, அரசமைப்புச் சட்டத்தின் 213–ஆம் உறுப்பின் (1)–ஆம் கூறின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, ஆளுநர் பின்வரும் அவசரச் சட்டத்தை இப்போது இதன் மூலம் பிறப்பிக்கின்றார்.–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்த அவசரச் சட்டம், 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கின அறிவியல் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 42/1989.

11–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** 1989–ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கின அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் 11–ஆம் பிரிவில், (3)–ஆம் உட்பிரிவிற்கான மூன்றாம் வரம்புரையில், ''அறுபத்தைந்து ஆண்டுகள்'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக, ''எழுபது ஆண்டுகள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்

2012 ஆம் ஆண்டு
ஜூலைத் திங்கள் 30 ஆம் நாள்.

**கோ. ரோசையா,**
*தமிழ்நாடு ஆளுநர்.*

**விளக்கவுரை**

**1989**–ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கின அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 42/1989) பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரானவர், அறுபத்தைந்து வயது வரையில் பதவி வகித்தல் வேண்டும். தற்போது அரசானது துணைவேந்தரின் ஓய்வு பெறும் வயதினை, கல்வியாளர்கள் பெறும் அறிவானது கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கின அறிவியலில் கல்வியை வளம்பெறச் செய்வதற்காகப் பயன்படுத்தப்படுவதற்கு இயல்விக்கும் வகையில், 2009–ஆம் ஆண்டு மையப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் (மையச் சட்டம் 25/2009) உள்ளவாறான துணைவேந்தரின் ஓய்வு பெறும் வயதிற்கு இணையாக அமையும்வகையில், அறுபத்தைந்து வயதிலிருந்து எழுபது வயதாக உயர்த்தும் பொருட்டு, மேற்சொன்ன 42/1989 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தைத் திருத்துவதென முடிவு செய்துள்ளது.

2. இந்த அவசரச்சட்டம் மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**2012—ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31—ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட பின்வரும் அவசரச் சட்டமானது இதன் மூலம் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகிறது:—**

**தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 10/2012.**

**2012—ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டத்தை திருத்துவதற்கானதோர் அவசரச் சட்டம்.**

இம்மாநிலச் சட்டமன்றப் பேரவையின் கூட்டத்தொடர் நடைபெறாததாலும், இதன் பின்பு காணுகின்ற நோக்கங்களுக்காகத் தாம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டியதைத் தேவையானதாக்குகின்ற சூழ்நிலைகள் இருந்து வருகின்றன என்று தமிழ்நாடு ஆளுநர் தெளிவுறக் காண்பதாலும்:—

எனவே, அரசமைப்புச் சட்டத்தின் 213—ஆம் உறுப்பின் (1)—ஆம் கூறின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, ஆளுநர் பின்வரும் அவசரச் சட்டத்தை இப்போது இதன் மூலம் பிறப்பிக்கின்றார்.—

1. (1) இந்த அவசரச் சட்டம், 2012—ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக (திருத்த) அவசரச் சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 21/2012. 2. (இதன்பின்பு) இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான 2012—ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 11—ஆம் பிரிவில், (3)—ஆம் உட்பிரிவில் வரம்புரைக்குப் பின்பு, பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும். அதாவது:— 11—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

“**இரண்டாம் வரம்புரை:** மேலும், துணைவேந்தராக நியமிக்கப்படும் நபர் ஒருவர் அவரது பதவிக்காலத்தின்போது எழுபது வயதினை நிறைவெய்துவாரானால், தனது பதவியிலிருந்து அவர் ஓய்வு பெறுதல் வேண்டும்.”.

3. முதன்மைச் சட்டத்தின் 49—ஆம் பிரிவிற்கான வரம்புரையில், “அறுபத்தைந்து ஆண்டுகள்” எனும் சொற்றொடருக்குப் பதிலாக, “எழுபது ஆண்டுகள்” என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 49—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2012 ஆம் ஆண்டு
ஜூலைத் திங்கள் 31 ஆம் நாள்.

**கோ. ரோசையா,**
*தமிழ்நாடு ஆளுநர்.*

**விளக்கவுரை**

2012—ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 21/2012), துணைவேந்தரின் பதவியை வகிப்பதற்கான பெரும் அளவு வயது வரம்பைக் குறித்துரைக்கின்ற வகைமுறை எதுவும் இல்லை. இம்மாநிலத்தல் மீன்வள அறிவியலில் கற்பதையும் ஆராய்ச்சியைத் தொடர்வதையும் மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படுவதற்கு இயல்விக்கும் வகையில் துணைவேந்தரின் ஓய்வுபெறும் வயதினை, 2009—ஆம் ஆண்டு மையப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்படி (மையச் சட்டம் 25/2009) உள்ளவாறான துணைவேந்தரின் ஓய்வு பெறும் வயதிற்கு இணையாகக் குறித்துரைப்பதற்கு கருதப்பட்டுள்ளது. அதற்கிணங்கிய வகையில் அரசானது, முதல் துணைவேந்தர் உள்ளடங்கலாக துணைவேந்தரின் ஓய்வு பெறும் வயதை எழுபது வயதாகக் குறித்துரைப்பதற்கு, மேற்சொன்ன 21/2012 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தைத் திருத்துவதென முடிவு செய்துள்ளது.

2. இந்த அவசரச் சட்டம் மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ. ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.